# SRI DURGADEVI DEVASTHANAM INC

Inc. in NSW Registration Number: INC 9878192 ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143 Tel No. 9644 6682 9746 9724

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அறிவுத் திறன் போட்டி - 2018
## விதிமுறைகள்

### அறிவுப் போட்டி

1) ஒவ்வொரு போட்டிக்கும் நடுவர்கள் இருவர் சேர்ந்து போட்டியை நடாத்துவார்கள். நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும். போட்டி முடிவுகள் அன்றே தெரிவிக்கப்படும்.

2) போட்டியின்போது பெற்றோர் இருந்து பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

3) போட்டிகள் தொடர்பாக முறைப்பாடு செய்ய விரும்புவோர், எமக்கு எழுத்தில் கொடுக்க வேண்டும். முறைப்பாட்டுப் படிவம் கொடுக்கப்படும்.

4) முதலாவதாக வந்த பிள்ளையின் புள்ளிகள் 100க்கு உயர்த்தப்பட்டு மற்றய பிள்ளைகளுக்கும் அதே விகிதாசாரப்படி புள்ளிகள் வழங்கப்படும்.

5) 90 புள்ளியும் அதற்கு மேலாகவும் பெற்ற பிள்ளைகள் **BAND A** ஆகவும், 80 புள்ளியும் அதற்கு மேலாகவும் பெற்ற பிள்ளைகள் **BAND B** ஆகவும், 70 புள்ளியும் அதற்கு மேலாகவும் பெற்ற பிள்ளைகள் **BAND C** ஆகவும் கணிக்கப்படுவார்கள். 70 புள்ளிகளுக்கு குறைவாக பெற்ற மாணவர்களுக்கு பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

SRI DURGADEVI DEVASTHANAM INC
Inc. in NSW Registration Number: INC 9878192 ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143 Tel No. 9644 6682 9746 9724

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அறிவுத் திறன் போட்டி - 2018
# விதிமுறைகள்

## திருமுறை ஒப்புவித்தல் போட்டி

**புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும்.**

1. மனனம் செய்யும் திறமை (40 புள்ளிகள்)
தடங்கலின்றி திருமுறையை ஒப்புவிக்கவேண்டும் நீங்கள் பயின்ற ராகத்தில் பாடலாம் அல்லது ஒப்புவிக்கலாம் சரியாக மாணவர்கள் மனனம் செய்திருக்க வேண்டும். மாணவர்கள் ஒப்புவிக்கும்போது கருத்துப் பிழையின்றி ஒப்புவிக்க வேண்டும்

2. உச்சரிப்பு: (40 புள்ளிகள்)
மாணவர்கள் தமிழை சரியாக உச்சரிக்க வேண்டும். அதாவது சொற்களையும் எழுத்துக்களையும் கேட்பவர்கள் விழங்கிக் கொள்ளக் கூடிய முறையில் தெளிவாக உச்சரிக்க வேண்டும். கீழ்ப்பிரிவில் மழலை உச்சரிப்பு இருத்தல் பிழையன்று.

3. சபை மரபு: (20 புள்ளிகள்)
சபைக்கு வருதல், சபையில் உள்ளவர்களை விழித்தல், சபைக்கு முன் நிற்றல், சபையை விட்டகலல் என்பவற்றிக்கு வயதிற்கேற்ற பக்குவமும் தமிழர் மரபிற்கேற்ற செயற்பாடுகளும் இருத்தல் வேண்டும். ஒப்புவித்து முடித்தவுடன் இயற்கையான முறையில் வணக்கம் தெரிவித்து. தனது இருப்பிடம் சென்று அமர்தல் வேண்டும்.

**விதி முறைகள்**

1) ஒவ்வொரு போட்டிக்கும் நடுவர்கள் நியமிக்கபடுவார்கள். நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

2) போட்டியின்போது பெற்றோர் தமக்குள் உரையாடுவதும், தம் பிள்ளைகளுடன் உரையாடுவதும், இடையிட்டு கருத்து தெரிவிக்க முயல்வதும் தவிர்க்கபட வேண்டும். போட்டிகளின் போது பெற்றோர் அமைதியாக இருந்து ஒத்துழைக்க வேண்டும்.

3) போட்டிகள் தொடர்பாக முறைப்பாடு செய்ய விரும்புவோர் எமக்கு எழுத்தில் கொடுக்க வேண்டும்.

4) பிள்ளைகளின் பங்களிப்புக்கேற்ப பரிசுகள் வழங்கப்படும்.

5) முதலாவதாக வந்த பிள்ளையின் புள்ளிகள் 100க்கு உயர்த்தப்பட்டு மற்ற பிள்ளைகளுக்கும் அதே விகிதாசாரப்படி புள்ளிகள் வழங்கப்படும். 90 புள்ளியும் அதற்கு மேலாகவும் பெற்ற மாணவர்கள் **BAND A** ஆகவும் 80 புள்ளியும் அதற்கு மேலாகவும் பெற்ற மாணவர்கள் **BAND B** ஆகவும் 70 புள்ளியும் அதற்கு மேலாகவும் பெற்ற மாணவர்கள் Band **BAND C** ஆகவும் கணிக்கப்படுவார்கள். 70 புள்ளிகளுக்கு குறைவாக பெற்ற பிள்ளைகளுக்கு பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

SRI DURGADEVI DEVASTHANAM INC
Inc. in NSW Registration Number: INC 9878192 ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143 Tel No. 9644 6682 9746 9724

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அறிவுத் திறன் போட்டி - 2018
# விதிமுறைகள்

## வர்ணம் தீட்டும் போட்டி

பாலர் ஆரம்பபிரிவுக்கும் (5 வயதிற்கு கீழ்) பாலர்பிரிவுக்கும் (7 வயதிற்கு கீழ்) மட்டுமே இப்போட்டி நடைபெறும்.

### விதி முறைகள்

**புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும்.**

1) கொடுக்கப்பட்டிருக்கும் படத்திற்கு பொருத்தமான நிறங்களை பாவித்தல்(50 புள்ளிகள்)

2) ஒழுங்காக வர்ணத்தை தீட்டுதல் (50 புள்ளிகள்)
வர்ணம் தீட்டும் பொழுது கோடுகளுக்கு வெளியில் செல்லாமல் தீட்டுதல்.
பொருத்தமான அளவில் நிறங்களைப் பாவித்தல்.

3) ஒவ்வொரு போட்டிக்கும் 2 நடுவர்கள் நியமிக்கபடுவார்கள். நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

4) போட்டிகள் தொடர்பாக முறைப்பாடு செய்ய விரும்புவோர் எமக்கு எழுத்தில் கொடுக்க வேண்டும்.

5) பிரிவில் முதலாவதாக வந்த பிள்ளைக்கு புள்ளிகள் 100க்கு உயர்த்தப்பட்டு மற்ற பிள்ளைகளுக்கும் அதே விகிதாசாரப்படி புள்ளிகள் வழங்கப்படும்.

6) 90 புள்ளியும் அதற்கு மேலாகவும் பெற்ற பிள்ளைகள் **BAND A** ஆகவும், 80 புள்ளியும் அதற்கு மேலாகவும் பெற்ற பிள்ளைகள் **BAND B** ஆகவும், 70 புள்ளியும் அதற்கு மேலாகவும் பெற்ற பிள்ளைகள் **BAND C** ஆகவும் கணிக்கப்படுவார்கள். 70 புள்ளிகளுக்கு குறைவாக பெற்ற மாணவர்களுக்கு பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.